**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 03–ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 –ஆம் நாள் வியாழக்கிழமை

**பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 21/2018**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 199/2025**

**CN0R.NO. TNKR11-000879-2025**

**தமிழக அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
**லாலாப்பேட்டை காவல் நிலையம்,**
**குற்ற எண்.273/2017**
**சட்டபிரிவுகள் : 468, 471 IPC** --- புகார்தாரர்

// எதிர்//

**சகாதேவன்,**
**த/பெ.அம்மாசையப்பன்,**
**4/77, வி.கல்லிப்பாளையம், பல்லடம்,**
**திருப்பூர் மாவட்டம்.** --- குற்றம்சாட்டப்பட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 16.04.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC 199/2025,<br>CNR No.TNKR11-000879-2025 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Lalapet P.S.<br>/Vs/<br>**சகாதேவன்** |
| 6. | Date of Occurrence | 24.07.2017 |
| 7. | Date of Complaint | 24.07.2017 |
| 8. | Date of Arrest if any and Remand | 25.07.2017 |
| 9. | Period of remand of the accused | 25.07.2017 - 17.08.2017 |
| 10. | Date of Release on bail | 17.08.2017 |
| 11. | Date of Final report | 18.09.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused U/s.468, 471 IPC 240 of Code of Criminal Procedure | 14.03.2018 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW-1<br>PW-2<br>PW-3<br>PW-4<br>PW-5<br>PW-6<br>PW-7 | 14.02.2024<br>20.03.2024<br>20.03.2024<br>20.03.2024<br>19.06.2024<br>15.07.2024<br>18.02.2026 | 14.02.2024<br>20.03.2024<br>20.03.2024<br>20.03.2024<br>-<br>15.07.2024<br>18.02.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil | | |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 24.02.2026 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil | | |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil | | |
| 19. | Date of Commencement of Trial | 14.02.2024 | | |
| 20. | Date of closure of Trial | 18.02.2026 | | |
| 21. | Date of Sentence or order | 16.04.2026 | | |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil | | |
| 23. | If any delay, give explanation | No | | |

இவ்வழக்கு கடந்த 06.04.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.தியாகு., அவர்கள்

ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 16.04.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், லாலாப்பேட்டை கா. நி. கு. எண். 273/2017 |
| எதிரியின் பெயர் | சகாதேவன்,<br>த/பெ.அம்மாசையப்பன்,<br>4/77, வி.கல்லிப்பாளையம், பல்லடம்,<br>திருப்பூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 468, 471 IPC |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 468, 471 IPC |
| எதிரியின் பதில் | குற்றவாளி அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி அல்ல |
| அரசு குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.V.தியாகு |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 06.04.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 17.04.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது லாலாபேட்டை காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173 –இன் கீழ் 24.07.2017 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவு U/s. 468, 471 ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.21/2018 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையறை அடிப்படையில் மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதிமன்ற ROC.No.19/2024/A1, 30.09.2025 என்ற உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண்.199/2025 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

**<u>இறுதியறிக்கையின் சுருக்கம்:</u>**

24.07.2017 ம் தேதி 16.30 மணிக்கு லாலாபேட்டை காவல் சரகம் சிந்தலவாடி காவேரி ஆற்று அரசு மணல்குவாரியில் எதிரியானவர் தனது லாரியில் விரைவாக மணல் அள்ளிச்செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் ஏமாற்றும் பொருட்டு தனது லாரியில் போலீயான பதிவு எண்ணை ஸ்டிக்கரில் ஒட்டி பொய்யை உண்மையானது போன்று நம்ப வைத்து மணல் அள்ளிச்செல்ல லாரியை ஓட்டி வந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 468, 471 IPC ன் படி தண்டிக்கப்பட வேண்டியவராகிறார் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** லாலாப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரிகளின் மீது கு.வி.மு.ச.பிரிவு 173 மற்றும் 190(1) BNSS ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு 468, 471 – இதசவின் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

**3)** எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவுகள் 207–ன் படி வழக்கு ஆவணங்களின நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு 468, 471 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**4)** இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 10 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 5, 9 மற்றும் 10 சாட்சிகள் விசாரிக்காமல் Dispence செய்யப்பட்டுள்ளார்கள். எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>**

**5.1)** அ.சா.1. அண்ணாமலை, மோகனூர், உபகோட்டம் நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் எதிரியை அவருக்கு தெரியும். கடந்த 24.07.2017 ம் தேதி மாலை 04.30 மணியளவில் சிந்தலவாடி மணல்குவாரியில் பணியில் இருந்தபோது மணல் எடுப்பதற்கு ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்ட லாரிகள் வந்ததை சரிபார்த்து கொண்டிருந்தபோது TN-30-X-6558 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஆவணங்களை சரிபார்த்தபோது போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது என தெரிய வந்தது. லாரியின் பதிவெண் வேறு என்பதும் தெரிய வந்தது. அசல் பதிவெண் அனுமதி சீட்டில் இருந்தது. அதை ஸ்டிக்கராக லாரியில் ஒட்டப்பட்டு இருந்தது. எதிரி ஓட்டி வந்த லாரியின் அசல் பதிவெண் TN-47-L-1150 ஆகும். லாரியை ஓட்டி வந்தவர் சகாதேவன் பல்லடம் என தெரிய வந்தது. லாரியையும், எதிரியையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்து அ.சா.ஆ.1 புகார் கொடுத்தார். லாரி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மணல் எழுப்பதற்கான ஆன்லைன் அனுமதி சீட்டு அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**5.2)** அ.சா.7 திருமதி. கோமதி, திருப்பூர் மாநகரம், கொங்கு நகர், மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். கடந்த 24.07.2017 ம் தேதி 18.00 மணிக்கு லாலாப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது கனிமம் மற்றும் கண்காணிப்பில் பிரிவில் நீர்வளத்துறை உதவி பொறியாளர் அண்ணாமலை என்பவர் அளித்த புகாரைப் பெற்று நிலையக்குற்ற எண்.273/2017 இதச பிரிவுகள் 468, 471, 420 இதசவின் படி வழக்கு பதிவு செய்தார்.

**5.3)** அப்போது காவல் நிலையத்தில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.சிவசுப்பிரமணியன் என்பவரின் பார்வைக்கு புலன் விசாரணைக்காக வைத்துள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினம் சம்பவயிடம் சென்று 19.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ரவிச்சந்திரன், பார்த்திபன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

**5.4)** பின்னர் இதர சாட்சிகள் பெரியசாமி, சந்திரபாண்டியன்

ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 20.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரில் இருந்த எதிரி சகாதேவன் என்பவரை கைதுக்காக காரணம் கூறி விதிமுறைகள் படி கைது செய்து சாட்சிகள் பிரவீன் குமார், போஜராஜன் என்பவர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

**5.5)** எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இவ்வழக்கின் சொத்துக்களான TN–30–X–6558, 10 சக்கரம் கொண்ட போலியான பதிவெண் கொண்ட லாரி அதன் உண்மையான எண்.TN–47–N–1150 என்ற பதிவெண் கொண்ட மற்றும் கனிமம் மற்றும் லாரி அனுமதிச்சீட்டு, அடையாளச்சீட்டு ஒப்புதல் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி எதிரியை தக்க வழிக்காவலுடன் Form–91 உடன் வழக்கின் சொத்துக்களுடன் நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தார்.

**5.6)** 25.07.2017 ம் தேதி உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவரை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 18.09.2017 ம் தேதி இவ்வழக்கின் சொத்துக்களுக்கு நீதிமன்ற ஆர்.பி.எண். பெற்றும் அன்றைய தினம் சட்டப்பிரிவான 468, 471, 420 யிலிருந்து 468, 471 ஆக மாறுதல் செய்து காவல் ஆய்வாளர் கோமதி இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

**6)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 24.02.2026 ஆம் தேதி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்.

**7)** இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரிகளின் மீது இதச பிரிவுகள்** 468, 471 இதசவின் கீழ் **வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**?

என்பதே ஆகும்.

**8) அரசு தரப்பு வாதம் :–**

அரசு தரப்பில் அ.சா.1 அரசு ஊழியர் என்றும், அ.சா.1 போலியான நெம்பர் பிளேட் ஒட்டி ஆற்று மணலை அள்ள வந்த எதிரி ஓட்டி வந்த லாரியை பிடித்து விசாரித்து மணல் அள்ளுவதற்கான உரிமத்தில் உள்ள பதிவெண்ணை வேறு வாகனத்தில் ஒட்டி வந்த எதிரியை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி சங்கதியை நிரூபிக்க, புகார் மற்றும் மணல் அள்ளுவதற்கான அனுமதி சீட்டு ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.1ன் மூலம் வழக்கு சம்பவம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் எதிரிக்கு அதிகப்படியான தண்டனை வழங்கும்படி சாட்சியங்களை படித்து காண்பித்தும் வாதிட்டார்.

**9) எதிரி தரப்பு வாதம்:–**

இந்த வழக்கில் எதிரி மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், அ.சா.1 அன்றைய தேதியில் பணியில் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், போலியான நெம்பர் பிளேட் ஒட்டியிருந்ததை ஆர்.டி.ஓ.வுடன் ஒப்படைத்து ஆய்வு செய்து உண்மை எது, பொய் எது என்று நிரூபிக்கவில்லை என்றும், லாரியின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், அ.சா.1 சோதனை செய்ததாக சொல்லப்படும் வேறு நம்பகமான சாட்சிகள் யாரும் உறுதியூட்டம் செய்யவில்லை என்றும், லாரியில் மணல் ஏற்றவில்லை என்றும், அதனால் எதிரியை விடுதலை செய்யும்படியும் வாதிட்டார்.

**10) தீர்வு.**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

24.07.2017 ம் தேதி 16.30 மணிக்கு லாலாபேட்டை காவல் சரகம் சிந்தலவாடி காவேரி ஆற்று அரசு மணல்குவாரியில் எதிரியானவர் தனது லாரியில் விரைவாக மணல் அள்ளிச்செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் ஏமாற்றும் பொருட்டு தனது லாரியில் போலீயான பதிவு எண்ணை ஸ்டிக்கரில் ஒட்டி பொய்யை உண்மையானது போன்று நம்ப வைத்து மணல் அள்ளிச்செல்ல லாரியை ஓட்டி வந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 468, 471 IPC ன் படி தண்டிக்கப்பட வேண்டியவராகிறார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**11) இ.த.ச பிரிவு 468 மற்றும் 471 ஐ பொறுத்து:**

எதிரி கடந்த 27.04.2012 அன்று மாலை 04.30 மணியளவில் சிந்தலவாடி மணல் குவாரியில் மணல் எடுப்பதற்காக ஆன்லைனில் பதிவு செய்து TN-30-X-6558 என்ற வாகனத்தை ஓட்டி வந்ததை சரிபார்த்தபோது அந்த வாகனத்தில் உண்மையான பதிவெண் TN-47-L-1150 என்றும், மேற்படி நம்பர் பிளேட்டில் TN-30-X-6558 என்று ஸ்டிக்கர் ஒட்டி விரைவாக மணல் அள்ள செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் போலியான பதிவெண்ணை ஒட்டி உண்மையானது போல் நம்ப வைத்து லாரியை ஓட்டி வந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும். இதச பிரிவு 468 ஆனது ஏமாற்றும் நோக்குடன் பொய் ஆவணம் புனைவதற்கான தண்டனை அளிக்கக்கூடிய பிரிவாகும். பிரிவு 471 ஆனது பொய்யாக புனையப்பட்ட ஆவணம் என்பதை தெரிந்துக் கொண்டு உண்மையானது போல் மோசடியாக நேர்மையின்றி பயன்படுத்துவதற்கு தண்டனை அளிக்கக்கூடிய பிரிவாகும்.

**11.1)** அ.சா.1 அண்ணாமலை தனது சாட்சியத்தில், மோகனூர், உபகோட்டை நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் எதிரியை அவருக்கு தெரியும். கடந்த 24.07.2017 ம் தேதி மாலை 04.30 மணியளவில் சிந்தலவாடி மணல்குவாரியில் பணியில் இருந்தபோது மணல் எடுப்பதற்கு ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்ட லாரிகள் வந்ததை சரிபார்த்து கொண்டிருந்தபோது TN-30-X-6558 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஆவணங்களை சரிபார்த்தபோது போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது என தெரிய வந்தது. லாரியின் பதிவெண் வேறு என்பதும் தெரிய வந்தது. அசல் பதிவெண் அனுமதி சீட்டில் இருந்தது. அதை ஸ்டிக்கராக லாரியில் ஒட்டப்பட்டு இருந்தது. எதிரி ஓட்டி வந்த லாரியின் அசல் பதிவெண் TN-47-L-1150 ஆகும். லாரியை ஓட்டி வந்தவர் சகாதேவன் பல்லடம் என தெரிய வந்தது. லாரியையும், எதிரியையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்து அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11.2)** அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், லாரியில் மணல் ஏற்றப்படவில்லை என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

**11.3)** அ.சா.4 போஜராஜன், அ.சா.5 சௌந்தரபாண்டியன் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், புகார்தாரரையும், எதிரியையும் தெரியாது என்றும், பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். மேற்படி சாட்சிகளிடம் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

செய்த போது அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**11.4)** அ.சா.6 செல்வராஜ், காவல் உதவி ஆய்வாளர் அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11.5)** அ.சா.7 கோமதி, புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில், அவருக்கு முன்பு புலன் விசாரணை செய்த சிவசுப்பிரமணியன் என்பவர் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில், சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது பற்றியும், அ.சா.7 வழக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தது பற்றியும் உதவி ஆய்வாளரை விசாரித்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்ததது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

**11.6)** ஒரு லாரி உண்மையான நம்பர் பிளேட்டை மறைத்து போலியான நம்பர் பிளேட் ஒட்டப்பட்டிருந்தால் அதனை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் ஒப்படைத்து வாகனத்தின் சேஸ் நெம். என்ன என்பதை உறுதி செய்து அந்த நம்பரை வைத்து அசல் ஆர்.சி புக்கை பார்வையிட்டு என்ன நெம்பர் வாகனத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டு நிரூபித்தால் தான் போலியான நெம்பர் ஒட்டப்பட்டதா அல்லது உண்மையான நெம்பர் உடன் வாகனம் வந்ததா என்பது தெரிய வரும்.

**11.7)** அ.சா.7 புலன் விசாரணை அதிகாரியான திருமதி.கோமதி தனது குறுக்கு விசாரணையில், போலியான நம்பர் பிளேட் ஒட்டியிருந்ததை ஆர்.டி.ஓ அலுவலகத்தில் ஆய்வு செய்ய கொடுத்தேனா என்றால் இல்லை என்று ஒப்புக் கொண்டுள்ளார். அதனால், எதிரி தான் வாகனத்தின் போலியான நெம்பர் பிளேட்டை ஒட்டி வாகனத்தை இயக்கி உண்மையானது போல் பயன்படுத்தினார் என்று அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.8)** அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 அனுமதி ரசீது மற்றும் லாரி அடையாள சீட்டு. மேற்படி ஆவணத்தில், கஷ்டமர் நேம் குமரவேல் லாரியின் பதிவெண் TN–

30-X-6558 டெலிவரி அட்ரஸ் கோயம்புத்தூர், பருவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. லாரியின் அடையாளமாக பதிவெண் TN-30-X-6558 என்று குறிப்பிடப்பட்டு 12.04.2022 ம் தேதி காலம் முடிவடைவதாகும். லாரியின் பெயர் ஸ்ரீ அன்னை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, ஆவணம் மூலம் TN-30-X-6558 என்ற லாரிக்கு தான் மணல் அள்ள உரிமம் வழங்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. மணல் அள்ள வழங்கப்பட்ட உரிமத்தில் போலியான பதிவெண் எதுவும் போடவில்லை. உரிமம் சரியாக வழங்கப்பட்டு வேறு லாரியில் மணல் ஏற்ற முயற்சி செய்வது என்பது ஏமாற்றுதல் குற்றமாகாது. உரிமம் இல்லாமல் மணல் அள்ள முயற்சி செய்தால் தான் ஏமாற்றுதல் குற்றம் எழும் உரிமம் பெறாமல் உரிமம் பெற்றதாக மணல் அள்ள முயற்சி செய்தால் தான் குற்ற எண்ணம் இருக்கும் இந்த வழக்கை பொறுத்த வரை அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய ஆவணங்கள் உண்மையானது மணல் அள்ளுவதற்கு உரிமம் உள்ள போது வேறு வாகனத்தில் மணல் அள்ள முயற்சி செய்வது என்பது குற்ற எண்ணமுடையதாக சொல்லமுடியாது.

**11.9)** அ.சா.ஆ.1 புகார் மேற்படி ஆவணத்தில் 24.07.2017 ம் தேதி 18.00 மணிக்கு குற்ற எண்.273/2017 ல் 468, 471, 420 இதசவின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு குறிப்பு எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில், புகாரில் உள்ள கையொப்பம் அவருடையது என்றும், புகார் அவர் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதிகள் மூலம் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ள சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**11.10)** அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை அ.சா.7 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 24.07.2017 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 25.07.2017 அன்று நீதிபதியால் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இதன் மூலம் அ.சா.1 யிடம் பெற்ற புகார் வாக்குமூலத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

12) அ.சா.2 பார்தீபன், அ.சா.3 பிரவின் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி ஆவார்கள். தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அவர்களுடையது தான் என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியமாகியுள்ளார். மேற்படி, சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை செய்த போது அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

13) ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகவும், இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி என்று ஆன்லைன் மூலம் புக் செய்த ரசீது மற்றும் லாரியை தங்களிடம் ஆஜர் செய்த என்ற பகுதி குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே லாரியை அ.சா.1 காவல் நிலையத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். ஆன்லைன் மூலம் புக் செய்யப்பட்ட ரசீது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி ரசீது எந்த நெம்பரும் போர்ஜரியாக போடவில்லை என்பது தெரிய வந்ததால் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்புடையதாக இல்லை.

14) கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.6 ஆகவும், இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, ஆவணத்தில் லாலாபேட்டை காவல் நிலைய குற்ற எண்.273/2017 ல் மேல் நடவடிக்கைக்காக எதிரி சகாதேவன் என்பவரிடமிருந்து காவல் ஆய்வாளர் சுப்பிரமணியன் என்பவரால் சாட்சிகள் பிரவின், போஜராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சிகள் பிரவின், போஜராஜன் ஆகியோர்கள் பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். அதனால் கைப்பற்றுதல் மகசர் அரசு

தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

**15)** படிவம் 91 அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN–47–L–1150 என்ற பதிவெண் கொண்ட லாரியை TN–30–X–6558 என்று போலி எண்ணால் எழுதப்பட்ட ஸ்ரீ அன்னை என்ற பெயரில் உள்ள டாரஸ் லாரி கைப்பற்றுள்ளதாகவும், மேற்படி வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் நீதிமன்றத்தில் குளித்தலை நீதிமன்றம் எண்.1 ஆர்.பி.எண்.89/2017 மூலம் ஆஜர்படுத்தப்பட்டு Crl.M.P.No.5890/2017 ல் கடந்த 27.11.2017 ம் தேதியிட்ட உத்தரவின்படி குமரவேல் த/பெ.சுப்பிரமணியன் என்பவருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**16)** அ.சா.ஆ.4 பார்வை மகசர் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 01 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. சம்பவயிடமானது சிந்தலவாடி அரசு மணல் குவாரியில் நடந்துள்ளது. அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சிந்தலவாடி காவேரி ஆற்று அரசு மணல்குவாரியில் அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவயிடத்திற்கு செல்லாமல் அங்குள்ள அம்சங்களை வரைபடமாக வரைய முடியாது. அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.10 ஆவணங்கள் மூலம் சம்பவயிடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர் என்பது தெரிய வருகிறது.

**17)** அ.சா.ஆ.14 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும் போது இதச பிரிவு 468, 471, 420 லிருந்து 420 ஐ நீக்க 468, 471 ன் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

இறுதியில், எதிரிக்கெதிரான 468, 471 –ன் கீழான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி அல்ல என தீர்மானித்து குவிமுச பிரிவு

248 (1) மற்றும் 271(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாத நிலையில் எதிரியின் பிணைமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

குளித்தலை JM 2 RP NO. 89/2017 ல் கைப்பற்றப்பட்டு, பெறப்பட்ட TN–47–L–1150 என்ற பதிவெண் கொண்ட லாரியை TN–30–X–6558 என்று போலி எண்ணால் எழுதப்பட்ட ஸ்ரீ அன்னை என்ற பெயரில் உள்ள டாரஸ் லாரியை அதன் உரிமையாளர் குளித்தலை JM 2 நீதிமன்ற Crl.M.P.No.5890/2017 உத்தரவின்படி இடைக்கால பராமரிப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி, வாகனத்தை வேறு யாரும் உரிமை கோரததாலும் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேற்படி வாகனத்திற்கு அதன் உரிமையாளர் எழுதிக் கொடுத்த பிணை முறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்படுகிறது.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.20 03:35:42 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | அண்ணாமலை (புகார்தாரர்) |
| அ.சா.2 | பார்த்திபன் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.3 | பிரவின் (ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| அ.சா.4 | போஜராஜன் (ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| அ.சா.5 | சவுந்திரபாண்டியன் |
| அ.சா.6 | திரு.செல்வராஜ் (காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு) |
| அ.சா.7 | திருமதி.கோமதி (புலன் விசாரணை அதிகாரி) |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | லாரியின் அனுமதி சீட்டு |
| அ.சா.ஆ.3 | அடையாள சீட்டு |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.7 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.8 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.9 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.10 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.12 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.13 | படிவம் – 91 |
| அ.சா.ஆ.14 | சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை |

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–இல்லை</u>**

**<u>எதிரி தரப்பில் சான்று பொருட்கள் :– இல்லை</u>**

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | லாரி |

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.20 03:35:48 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின்சேர்க்கை:</u>**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்:</u>**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.